# திருமுறைத் திருமணம்



மணமக்கள்

## இர. சக்தி

## அ. அரவிந்து சேவியர்

# தமிழ்த் திருமணம்

மணமகள் பெற்றோர்

Dr. மு. இரவிக்குமார்
Dr. இர. அருண்மொழி

மணமகன் பெற்றோர்

திரு. ம.ச. அல்போன்ஸ்
திருமதி. அ. லூர்து மேரி

# திருமண விழா

நடத்துபவர் :
திருநெறிச்செம்மல்
வித்துவான் திரு. வி.சா. குருசாமிதேசிகர்,
மயிலாடுதுறை

# திருமுறைத் திருமணம் நிகழ்முறை

1. விநாயகர் வழிபாடு - மணமக்கள் பெற்றோர்
2. அம்மையப்பர் வழிபாடு-மணமக்கள் பெற்றோர்
3. கோள் வழிபாடு-மணமக்கள் பெற்றோர்
4. திருவிளக்கு வழிபாடு
5. மணமகன் வருகை
5. மங்கலக் காப்பு அணிவித்தல்
6. மண ஆடை அளித்தல் - மணமகனுக்கு
8. மணமகள் வருகை
9. மண ஆடை அளித்தல் - மணமகளுக்கு
10. அழலோம்பல்
11. பெற்றோர் வழிபாடு மணமக்கள்
12. மணமாலை சூட்டல்
13. மணமகளுக்கு மங்கலக் காப்பு அணிவித்தல்
14. மணமக்கள் அம்மையப்பர் வழிபாடு
15. மகட்கொடை
16. உறுதிமொழி ஏற்றல்
17. திருமாங்கல்ய வழிபாடு

18. திருமாங்கல்யம் அணிவித்தல்
19. மாலை ஏற்றல்
20. மிஞ்சி இடுதல்
21. வலம் வருதல்
22. அம்மி மிதித்து அருந்ததி காணல்
23. மங்கல நீர் சுற்றல்
24. மஞ்சட்காப்புக் களைதல்
25. வாழ்த்து

## 1. விநாயகர் வழிபாடு

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலம்உறை இறையே.

## 2. அம்மையப்பர் வழிபாடு

நன்றுடை யானைத் தீயதி லானை நரைவெள்ளேறு
ஒன்றுடை யானை உமையொரு பாகம்
உடையானைச்
சென்றடை யாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறஎன் உள்ளம் குளிரும்மே

## 3. கோள் வழிபாடு

வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்துஎன்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

## 4. திருவிளக்கு வாழிபாடு

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே.

## 5. மணமகன் வருகை

மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க
நன்னகர் விழவு கொள்ள நம்பியாரூரர், நாதன்
தன்னடி மனத்துட்கொண்டு தரும் திருநீறு சாத்தி
பொன்னன் மணியார் யோகப் புரவிமேற்கொண்டு போந்தார்

## 6. மங்கலக் காப்பு அணிவித்தல்

மாறிலா நிறைவளந்தரு புகலியின் மணமீக்
கூறும்நாளின்முன் நாளினில் வேதியர் குழாமும்
நீறு சேர் திருத் தொண்டரும் நிகரிலா தவருக்கு
ஆறு ஆடினார் அருள்திருக் காப்புநாண் அணிவார்.

## 7. மண ஆடை அளித்தல்

தம்மை யேபுகழ்ந்து இச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயறவு இல்லையே

## 8. மணமகள் வருகை

பொன்னின்ஒளி பூவின்வெளி சாந்துபொதி சீதம்
மின்னின் எழில் அன்னவள்தன் மேனிஒளி மான
அன்னமும் அரம்பையரும் ஆரமிழ்தும் நாண
மன்னவை இருந்த மணி மண்டபம் அடைந்தாள்.

## 9. மண ஆடை அளித்தல்

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

## 10. ஆழலோம்பல்

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்சொல் ஆனாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும் தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கு மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

## 11. பெற்றோர் வழிபாடு

அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடை மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஒரூரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பப்பாய் நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## 12. மணமாலை சூட்டுதல்

மன்றலின் வந்து மணித்தவிசு ஏறி
வென்றி நெடுந்தகை வீரனும் ஆர்வத்து
இன்துணை அன்னமும் எய்தி இருந்தார்
ஒன்றிய போகமும் யோகமும் ஒத்தார்

## 13. மணமகளுக்கு மங்கலக்காப்பு அணிவித்தல்

பேயடையா பிரிவெய் தும்
பிள்ளையினோடு உள்ளம் நினை
வாயினவே வரம் பெறுவர்
ஐயுறவேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன்
வெண்காட்டு முக்குளநீர்
தேய்விணையார் அவர் தம்மைத்
தோயாவாம் தீவினையே.

## 14. மணமக்கள் அம்மையப்பர் வழிபாடு

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் அயனோடு மாலும் காணா
அனல் உருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி

தனம் தரும் கல்வி தரும் ஒருநாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும்தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபராமி  கடைக்கண்களே

# 15. மகட்கொடை

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இம்மங்கல நன்னாளில் சென்னை, மு.இரவிக்குமார் - இர.அருண்மொழி பெயர்களை உடைய நாங்கள் எங்கள் திருமகள் இர.சக்தியை ம.ச.அல்போன்ஸ் - அ.லூர்துமேரி ஆகியோரின் திருமகனாய்த் தோன்றிய திருவளர் செல்வன் அ.அரவிந்த் சேவியர் அவர்களுக்கு வாழ்க்கைத் துணைவியாக மனம் உவந்து கொடுக்கின்றோம்

மணமகன்: மனமகிழ்வோடு ஏற்றுக் கொண்டேன்.

## பாடல்

பெருகொளிஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங்கல நீர்வாசக் கரகமுன் ஏந்தி வார்ப்பார்
தருமுறை கோத்திரத்தின் தம்குலம் செப்ப என்றன்
அருநிதிப் பாவையாரைப் பிள்ளையார்க்கு அளித்தேன் என்றார்

# 16. உறுதி மொழி கூறல்

## மணமகன்

எல்லாம் வல்ல இறைவன் அருள் துணைக் கொண்டு நிகழும் விஜய வருடம் ஆனி மாதம் 14ஆம் தேதி திரு.மு.இரவிக்குமார் - இர.அருண்மொழி ஆகியோரின் அன்புத் திருமகள் இர.சக்தியை என் வாழ்க்கைத் துணைவியாக மனம் உவந்து ஏற்றுக் கொண்டேன்.

நாங்கள் இருவரும் மலரும் மணமும் போல இணைந்து வாழ்ந்து வள்ளுவர் கூறிய குறள் நெறியில் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்துவோம் என உறுதி கூறுகிறேன்.

இங்ஙனம்

சென்னை<br>அ.அரவிந்த் சேவியர்

28.06.2013

# மணமகள்

எல்லாம் வல்ல இறைவன் அருள் துணைக் கொண்டு நிகழும் விஜய வருடம் ஆனி மாதம் 14ஆம் தேதி திரு.ம.ச.அல்போன்ஸ் - அ.லூர்துமேரி ஆகியோரின் அன்புத் திருமகன் அ.அரவிந்த் சேவியர் அவர்களை என் வாழ்க்கைத் துணையாக மனம் உவந்து ஏற்றுக் கொண்டேன்.

நாங்கள் இருவரும் மலரும் மணமும் போல இணைந்து வாழ்ந்து வள்ளுவர் கூறிய குறள் நெறியில் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்துவோம் என உறுதி கூறுகிறேன்.

இங்ஙனம்

சென்னை — இர. சக்தி

28.06.2013

## 17. திருமாங்கல்ய வழிபாடு

முன்னியாய் நின்ற முதல்வா போற்றி
மூவாத மேனி யுடையாய் போற்றி
என்னியா யெந்தை பிரானே போற்றி
ஏழின் இசையே யுகப்பாய் போற்றி
மன்னிய மங்கை மணாளா போற்றி
மந்திரமும் தந்திரமும் ஆனாய் போற்றி
கன்னியர் கங்கைத் தலைவா போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

பொங்குரு செல்வம் கல்வி பொருவிலா
வாய்மை தூய்மை இங்கெமக்கு அருளவல்ல
இணையிலா எம்பிராட்டி பங்கயத் தடஞ்சூழ் கூடல்
பவளமால் வரையை நீங்கா ஆங்கயற் கண்ணி
மங்கை அடிக்கமலங்கள் போற்றி.

## 18. திருமாங்கல்யம் அணிவித்தல்

மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.

கற்றும்நான் மறைகள் ஆர்ப்பத் துரியம் சங்கம் ஓங்கக்
கற்றநான் முகந்தோன் வேள்விச் சடங்குநூல் கரைந்த ஆற்றால்
முற்றம்மங்கல நாண் சாத்தி முழுதுல கீன்றாள்செங்கை
பற்றினன் பற்றிலார்க்கே வீடருள் பரமயோகி.

## 19. மாலை மாற்றுதல்

பூந்தார் நறுங்கொன்றை
        மாலையை வாங்கிச் சடைக்கணிந்து
கூர்ந்தார் விடையினை ஏறிப்
        பல் பூதப்படை நடுவே
போந்தார் புறவிசை
        பாடவும் ஆடவும் கேட்டருளிச்
சேர்ந்தார் உமையவளோடும்
        நெய்த்தானந்து இருந்தவனே

## 20. மிஞ்சி இடுதல்

கழல்கொள் காலினர் காலனைக் காய்ந்தவர்

தழல்கொள் மேனியர் சாந்த வெண்ணீறணி

அழகர் ஆல் நிழல் கீழறம் ஓதிய

குழகர் போற் குளிர் நாகேச் சரவரே.

## 21. வலம் வருதல்

மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மலையான்
மகளொடு பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்புகுவார்அவர்பின்
புகுவேன்
யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்ற போது
காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம்
கண்டறியாதன கண்டேன்.

## 22. அம்மி மிதித்து அருந்ததி பார்த்தல்

மங்கலம் புனைந்த செம்பொன் அம்மிமேல்
மணாட்டிபாத
பங்கய மலரைச் கையால் பரிபுரம் சிலம்பப் பற்றிப்
புங்கவன் மனுவால் ஏற்றிப்புண்ணிய வசிட்டன்தேவி
எங்கெனச் செங்கை கூப்ப எதிர்வர அருட்கண்சாத்தி.

## 23. மங்கல நீர் சுற்றல்

வாழ்க அந்தனர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே.

## 24. காப்பு களைதல்

ஆறுலவு செய்யசடை ஐயர் அருளாலே
பேறுல கினுக்குஎன வரும் பெரியவருக்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்தி நிறைவித்தார்
ஆனந்த வெள்ளத்து அழுந்தும் ஒர் ஆருயிர்
ஈருருக்கொண்டு
ஆனந்த வெள்ளத்திடை திளைத்தால் ஒக்கும்
அம்பலம் சேர்
ஆனந்த வெள்ளத்துறை கழலோன் அருள்
பெற்றவர்கள் ஆனந்த வெள்ளம் வற்றாது முற்றாது
இவ்வணி நலமே.

## 25. வாழ்த்து

நமச்சிவாய வாழ்க
நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட
குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று
அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன்
இறைவன் அடிவாழ்க.

# நலமும் வளமும் பெற
# அபிராமி அம்மைப்பதிகம்

கலையாத கல்வியும் குறையாத வயதும் ஓர்
        கபடுவா ராதநட்பும்
கன்றா தவளமையும் குன்றாத இளமையும்
        கழுபிணி யிலாத உடலும்
சலியாத மனமும் அன்பு அகலாத மனைவியும்
        தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
        தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியுமும் கோணாத கோலும் ஒரு
        துன்பமில் லாதவாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
        தொண்டரோடு கூட்டுகண்டாய்:
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
        ஆதிகட வூரின்வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
        அருள்வாமி! அபராமியே!

## "பதினாறு பேறும் பெற்று வாழ்க"

துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவு தனம்
அதிதானியம் சௌபாக்யம் போகம் அறிவு அழகு
புதிதாம் பெருமை அறம் குலம் நோயின்மை
பூண்வயது
பதினாறு பேறும் தருவாய் மதுரைப் பராபரனே!

## உலகுக்கு வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க
மலிவளம் சுரக்க - மன்னன்
கோன்முறை அரசு செய்க
குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# திருமண விழா மலர்

மணமக்கள்

இர. சக்தி

அ. அரவிந்து சேவியர்

**சிவமயம்**

# நாள் வழிபாட்டுத் தேவாரப் பாடல்கள்

**திருச்சிற்றம்பலம்**

## விடியலில் எழுதல்

விடிவதுமே வெண்ணீற்றை மெய்யிற் பூசி
வெளுத்தமைந்த கீளொடுகோ வணமுந் தற்றுச்
செடியுடைய வல்வினை நோய் தீர்ப்பாய் என்றும்
செல்கதிக்கு வழிகாட்டுஞ் சிவனே என்றும்
துடியனைய இடைமடவாள் பங்கா என்றும்
சுடலை தனில் நடமாடும் சோ தீ யொன்றும்
கடிமலர் தூய்த் தொழுமடியார் நெஞ்சி னுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே .

அப்பர்

பெரும்புலர் காலை மூழ்கிப்
பித்தர்க்குப் பத்தராகி
அரும்பொடு மலர்கள் கொண்டாங்கு
ஆர்வத்தை யுள்ளே வைத்து
விரும்ப நல் விளக்குத் தூபம்
விதியினா லிடவல்லார்க்குக்
கரும்பினிலே கட்டிபோல்வார்
கடவூர் விரட்டனாரே

அப்பர்

## நீராடல்

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்ற இப்பத்தரைக் கோதி
செந்தேன்
தெளித்துச் சுவையமுதூட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கம் ஐயா றனடித் தலமே
அப்பர்

## திருநீறணிதல்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு, ஆலவாயான் திரு நீறே.
ஞானசம்பந்தர்

சந்திரற் சடையில் வைத்த சங்கரன் சாமவேதி
அந்தரத் தமரர் பெம்மான் ஆன் நல் வெள்ளூர் தியான்றன்
மந்திரம் நமச்சி வாய வாக நீ றணியப் பெற்றால்
வெந்தறும் வினையும் நோயும்வெவ்வழல் விறகிட்டன்றே.
அப்பர்

## திருவைந்தெழுத்தோதல்

காதலாகித் கசிந்து கண்ணீர் மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாய வே.

ஞானசம்பந்தர்

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

அப்பர்

## வழிபாடு செய்தல்

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா செயபோற்றி போற்றி யென்னும்
அலைபுனல் சேர் செஞ்சடையெம் ஆதியென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

அப்பர்

காவினை யிட்டுங் குளம்பல தொட்டுங் கனிமனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித் தீரென்றிரு பொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்.

ஞானசம்பந்தர்

## தியானம் (விநாயகர்)

பிடியதன் உருஉமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

ஞானசம்பந்தர்

## (முருகன்)

சமர சூரபன் மாவைத் தடிந்தவேல்
குமரன் தாதை நற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக் கன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம் (து) ஆளுடை யார்களே

அப்பர்

## (சிவபெருமான்)

செல்வ நெடுமாடம் சென்று சேணோங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ் தில்லைச் சிற்றம்பலம் மேய
செல்வன் கழல் ஏத்தும் செல்வம் செல்வமே

ஞானசம்பந்தர்

## (அம்பிகை)

எள்கலின்றி இமையவர் கோனை
ஈசனை வழிபாடு செய்வாள் போல்
உள்ளத் துள்கி யுகந் துமை நங்கை
வழிபடச் சென்று நின்ற வாகண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்ற வாரே

சுந்தரர்

## உண்ணும் பொழுது

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறு கண் டின்புற
இன்னம் பாலிக்கு மோ இப் பிறவியே

அப்பர்

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினும்
சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடாதே எந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையே சிவ லோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே

சுந்தரர்

## அலுவல்கள் தொடங்கும் பொழுது

நங் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென் கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடி யேனையுந் தாங்குதல்
என் கடன் பணி செய்து கிடப்பதே அப்பர்

## வெளியூர்க்குப் புறப்படும் பொழுது

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு உங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே ஞானசம்பந்தர்

தேனமர் பொழில் கொ ளாலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறை ஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆன சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே,

ஞானசம்பந்தர்

## மாலை வழிபாடு

பாலை நகு பனி வெண்மதி பைங்கொன்றை
மாலையுங் கண்ணியு மாவன சேவடி
காலையும் மாலையும் கை தொழுவார் மனம்
ஆலயம் ஆரூர் அடி னெறியார்க்கே. அப்பர்

புரிகாலே நேசம் செய்ய இருந்த புண் டரீகத்தாரும்
எரிகாலே மூன்று மாகி இமையவர் தொழநின் றாரும்
தெரிகாலே மூன்று சந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலங் கண்ட எந்தை திருச் செம்பொன் பள்ளியாரே
அப்பர்

## உறங்கப் புகுமுன்

துஞ்சலும் துஞ்ச லிலாத போழ் தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.
ஞானசம்பந்தர்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப்
பிறவாத தன்மை வந்தெய்தினேன்
கற்றவர் தொழு தேத்தும் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நன்றவா உனை நான் மறக்கினும்
சொல்லும் நா நமச்சிவாய வே. சுந்தரர்